தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

Vol: 02 | Issue: 224 | 4 Pages | 13.3.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 224 | 4 பக்கங்கள் | 13.3.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை**
**மேற்சென்று செய்யாப் படும்**

**விளக்கம்:**
நாவை அடக்கி விக்கல் மேலெழுவதற்கு முன்னே (இறப்பு நெருங்குவதற்கு முன்) நல்ல அறச்செயலை விரைந்து செய்யத்தக்கதாகும்.

## நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் பேச்சுக்கு எதிர்ப்பு: தமிழ்நாடு எம்.பி.க்கள் வெளிநடப்பு





புதுடெல்லி, மார்ச்.13

நாடாளுமன்றத்தில் பேசிய மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன், தமிழ்நாட்டின் கல்வி தரம்கொரோனாவுக்குப் பிறகு பின் தங்கி உள்ளதாக சுட்டிக்காட்டி பேசினார். குறிப்பாக மூன்றாம் வகுப்பு மாணவர்களால் ஒன்றாம் வகுப்பு பாட புத்தகத்தை கூட படிக்க முடியவில்லை என்று பேசினார்.

இதற்கு தமிழ்நாட்டு எம்.பி.க்கள் கண்டனம் தெரிவித்து வெளிநடப்பு செய்தனர். இதேபோல், மத்திய மந்திரி நிர்மலா சீதாராமன், கேரளா, மேற்கு வங்காளம் உள்ளிட்ட மாநிலங்களை குறித்தும் குறைகூறி பேசியதாக கூறி, அம்மாநில எம்.பி.க்களும் அவரது பேச்சுக்கு கண்டனம் தெரிவித்து வெளிநடப்பு செய்தனர்.

மக்களவையில் எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்ததை குறித்து செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. எம்.பி. கனிமொழி, "ஒவ்வொரு நாளும் தமிழ்நாட்டை அவமதிப்பதை மத்திய அரசு வழக்கமாகக் கொண்டுள்ளது. நேற்று, கல்வி மந்திரி அந்த அவமானத்தை ஏற்படுத்தினார். இன்று நிதி மந்திரி தமிழக அரசை அவமதிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். தமிழ்நாட்டிற்கு திட்டங்களை வழங்குவதன் மூலம் ஏதோ தொண்டு செய்வது போல் காட்டுகிறார்கள். பா.ஜ.க. அரசு, தினமும் தமிழ்நாட்டையும், எதிர்க்கட்சியினையும், எதிர்க்கட்சித் தலைவர்களையும் இழிவு செய்கிறது" என்று அவர் கூறினார்.

நிதிமந்திரியின் பதிலுக்கு எதிராக மக்களவையில் இந்திய கூட்டணித் தலைவர்கள் வெளிநடப்பு செய்ததை குறித்து காங்கிரஸ் எம்.பி. கவுரவ் கோகோய் கூறுகையில், "நிதிமந்திரி தேர்ந்தெடுக்கப்பட்ட தரவுகளைக் குறிப்பிட்டு தமிழ்நாட்டை மோசமாகக் காட்ட முயன்றார். தேர்ந்தெடுக்கப்பட்ட தரவுகளை முன்னிலைப்படுத்தி எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களைஅவதூறுசெய்யமத்தியமந்திரிகள்பலமுறைமுயற்சித்துள்ளனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தன" என்று அவர் கூறினார்.

## கர்நாடக மாநில பா.ஜனதா மகளிர் அணி பொதுச்செயலாளர் தற்கொலை உருக்கமான கடிதம் சிக்கியது



பெங்களூரு. மார்ச்.13

கர்நாடக மாநிலம் பெங்களூரு யஸ்வந்த்புரத்தை சேர்ந்தவர் மஞ்சுளா (வயது 42). இவர் கர்நாடக மாநிலம் பா.ஜனதா மகளிர் அணியின் பொதுச்செயலாளராக பொறுப்பு வகித்து வந்தார். மேலும் கட்சி பணியில் அவர் திறமையாக செயல்பட்டு வந்ததாக கூறப்படுகிறது. இந்தநிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு அவரது கணவர் உடல் நலக்குறைவால் மரணம் அடைந்தார். இதையடுத்து அவர்கட்சி பணியில் ஈடுபடாமல் விலகி இருந்தார்.

இந்தநிலையில் மதியம் வீட்டில் தனியாக இருந்த மஞ்சுளா தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து யஸ்வந்த்புரம் போலீசாருக்கு தகவல் கிடைத்தது. விரைந்து வந்த போலீசார் மஞ்சுளாவின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக எம்.எஸ்.ராமையா ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

பின்னர் இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தினர். அப்போது மஞ்சுளா கைப்பட எழுதிய கடிதம் போலீசாருக்கு கிடைத்தது. அதில் வாழ்க்கையில் பணம், பெயர், புகழ் ஆகியவை தான் முக்கியம் என்று நினைக்கிறோம். ஆனால் அது உண்மை இல்லை. நான் பணம், பெயர், புகழ் சம்பாதித்துவிட்டேன். ஆனால் நிம்மதி இல்லை. கடந்த சில நாட்களாக நான் நிம்மதி இழந்து தவிக்கிறேன் எனது தற்கொலைக்கு வேறு யாரும் காரணம் இல்லை.எனது தற்கொலைக்கு நான்தான் காரணம் என்று குறிப்பிட்டிருந்தார். அந்தகடித்தைகைப்பற்றிய போலீசார்அதைதடயவியல் ஆய்வுஅறிக்கைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனா்.

## இரவு முழுவதும் அழுகை; தொந்தரவு பொறுக்காமல் இரட்டை குழந்தைகளை கொலை செய்த தாய்



ஹரித்துவார், மார்ச்.13

உத்தரகாண்டின்ஹரித்துவார்நகரில் வசித்து வரும் 20 வயது பெண், இரட்டை குழந்தைகளான அவருடைய 6 மாத மகள்களை மூச்சு திணறசெய்து கொலைசெய்தஅதிர்ச்சி சம்பவம் நடந்துள்ளது.

அந்த பெண்ணின் கணவர் ஹரித்துவார் நகரில் ஜ்வாலாப்பூர் பகுதியில்உள்ளதனியார்நிறுவனத்தில் வேலை செய்து வந்துள்ளார். இந்நிலையில், குழந்தைகள் சுயநினைவின்றி உள்ளனர் என கணவரிடம்அந்த பெண்கூறியுள்ளார்.

இதில்ஏற்பட்டசந்தேகத்தின்பேரில் அவர் போலீசில் புகார் அளித்து உள்ளார். போலீசார் அந்த பெண்ணிடம் விசாரித்தபோது, வீட்டுக்கு தேவையான பொருட்களைவாங்கி விட்டுதிரும்பி வந்தபோது, அந்த 2 குழந்தைகளும் சுயநினைவின்றி கிடந்தன. உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது, உயிரிழந்து விட்டன என டாக்டர்கள் கூறி விட்டனர் என்றார்.

எனினும், போலீசார்நடத்திய தீவிரவிசாரணையில் குழந்தைகளை கொலை செய்த விவரங்களை வெளியிட்டார். அவர் போலீசாரிடம், அடிக்கடி குழந்தைகள் இரவு நேரத்தில் அழும். இதனால், சரியாக தூங்க முடியவில்லை.

அவர்களின் அழுகையை நிறுத்த முடிந்த வரை முயன்றேன். ஆனால் அதில் பலனில்லை. இதனால், அதிருப்தி ஏற்பட்டது. அதனால், வாயில் துணியை வைத்து அழுத்தியதில், மூச்சு திணறி உயிரிழந்து விட்டன என அதிர்ச்சியான தகவலை கூறியுள்ளார். அந்த குழந்தைகளின் பிரேத பரிசோதனை முடிவில், அவை மூச்சு திணறி உயிரிழந்த விவரம் தெரிய வந்தது. இதனை தொடர்ந்து, போலீசார் அந்த பெண்ணை கைது செய்தனர். தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

# தமிழர்கள் மீது பா.ஜ.க.வினருக்கு இருக்கும் வன்மம் வெளிப்பட்டுவிட்டது: முதல்வர் பேச்சு

சென்னை, மார்ச்.13

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

2024இல் மத்திய பா.ஜ.க. மந்திரி ஷோபா: "தமிழர்கள் வெடிகுண்டு வைக்கும் தீவிரவாதிகள்!"

2025இல் மத்திய பா.ஜ.க. மந்திரி தர்மேந்திர பிரதான்: "தமிழர்கள்நாகரிகம் இல்லாதவர்கள்!"

இப்படியெல்லாம் பேசிவிட்டுப் பின்பு வருத்தம் தெரிவித்தாலும், பேசிய போது தமிழர்கள் மீது பா.ஜ.க.வினருக்கு இருக்கும் வன்மம் வெளிப்பட்டுவிட்டது.

"இந்தியாவுக்கே வழிகாட்டும் தமிழ்நாடு, இவர்கள் கொண்டு வரும் NEPயை எக்காரணம் கொண்டும் ஏற்காது.

நம் உரிமைக்கான போர்க்குரலைத் தமிழ்நாடு தொடர்ந்து எழுப்பும்" எனச் செங்கல்பட்டு அரசு விழாவில் ஆணித்தரமாகத் தெரிவித்தேன்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறைக்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ வைரவசுவாமி என்ற பைரவர் திருக்கோவில் மகா அஷ்டபந்தன நூதன கோபுர ஜீரண தாரண கும்பாபிஷேக விழா


மதுரைமாவட்டம்தெற்குதாலுகா நல்லூர் கிராமத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறைக்கு பாத்தியப்பட்ட ஸ்ரீ வைரவசுவாமி என்ற பைரவர் திருக்கோவில் மகா அஷ்டபந்தன நூதன கோபுர ஜீரண தாரண கும்பாபிஷேக விழா கடந்த செவ்வாய்க்கிழமை மங்கல இசையுடன் சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க கணபதி ஹோமம் நவக்கிரக ஹோமம் லட்சுமி ஹோமம் விக்னேஸ்வரா பூஜை கோ பூஜை உள்ளிட்ட யாகசாலை பூஜைகளுடன் துவங்கியது. தொடர்ந்து கும்பாபிஷேகம் நிகழ்வினை முன்னிட்டு பெரிய பூசாரி பாலசுப்பிரமணியம் தலைமையில் யாகசாலையிலிருந்து எடுத்து வரப்பட்ட புனித நீரானது கோபுர கலசத்திற்கு ஊற்றப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. தொடர்ந்து சுவாமிக்கு பால் மஞ்சள் தயிர் உள்ளிட்ட வாசனை பொருட்களைக் கொண்டு சிறப்பு அபிஷேகமும்தீபாரதனையும்நடைபெற்றது.




இந்நிகழ்வில் உபயதாரர் தட்சிணாமூர்த்தி, விழா குழுவினர்கள் ராமர் மற்றும் நல்லூர் கிராம மக்கள் மற்றும் சுற்றுப்புற வட்டாரங்களை சேர்ந்த பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர் தொடர்ந்து ஊர் பொதுமக்களுக்கு ,சுற்றுவட்டார கிராம பொதுமக்கள் அனைவரும் இந்த அன்னதானத்தில் கலந்து கொண்டு இவ்விழாவை சிறப்பித்தனர்.

## குன்னூர் பகுதியில் கனமழை வீடுகளுக்குள் கழிவு நீர் புகுந்ததால் மக்கள் அவதி

நீலகிரி மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதத்திற்கு மேலாக பகலில் சுட்டெரிக்கும் வெயிலும், இரவு மற்றும் அதிகாலை நிலைகளில் கடும் குளிரும் என சீதோசன நிலை இருந்து வந்தது. இதனால் மாவட்டம் முழுவதும் உள்ள முக்கிய இடங்களில் செடி, கொடிகள் காய்ந்து சரிகாகி இருந்ததால் அவ்வப்போது தீ விபத்துகளும் ஏற்பட்டு வருகிறது. இந்நிலையில் தமிழகத்தில் உள்ள தென் மாவட்டங்களில் கன மழை பெய்து வருவதால்,மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள நீலகிரி மாவட்டத்தில் அதன் தாக்கம் தென்பட்டது. நேற்று மாலை 6 மணியிலிருந்துகுன்னூர்,சேலாஸ், கொலகம்பை, வெலிங்டன், அருவங்காடு, எடப்பள்ளி , வண்டிச்சோலை, காட்டேரி,கரும்பாலம் உள்ளிட்ட பகுதிகளில் கனமழை கொட்டியது. சாலையில் மழை நீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. விடிய விடிய பெய்த மழையால் நிலத்தில் ஈரத்தன்மை அதிகரித்து உள்ளதால் வரும் நாட்களில் காட்டுத் தீ விபத்துகளும் குறையும் வாய்ப்பு அதிக அளவில் உள்ளது.மேலும் மழை காரணமாக தேயிலை மற்றும் மலை தோட்ட காய்கறி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்நிலையில் ஓட்டு பட்டறை முத்தாலம்மன் பேட்டை பகுதியில் சமுதாயக்கூடம் அருகே தடுப்பு சுவர்



இல்லாததால் மழை மற்றும் கழிவு நீர்,சேரும் சகதியுமாக மாறி புவனேஸ்வரி மற்றும் சுலோச்சனா ஆகியோரின் வீடுகளுக்குள் தண்ணீர் மலமளவென உள்ளே புகுந்தது. சுமார் 2 மணி நேரமாக கழிவுநீர் தொடர்ந்து வந்ததால் வீடுகளுக்குள் இருந்த பொருட்கள் சேதம் அடைந்தது.மழை தொடரும் பட்சத்தில் இந்த பகுதியில் பெரும் பாதிப்பு ஏற்படக்கூடும் என்பதால் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உடனடியாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



சென்னை பெருநகர காவல் ஆணையாளர், காவல் ஆணையரகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர் முகாமில் பொதுமக்களின் மனுக்களை பெற்று விரைந்து நடவடிக்கை எடுக்க காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.



புதுச்சேரி ஓஷன் ஸ்டோரி குரூப் சார்பில் யூனிட்டி பார்க் கருவடிக்குப்பம் இ.சி.ஆர் சாலை அருகே புதிதாக துவங்கப்பட்டுள்ளது . இங்கு அமைந்துள்ள புட் கோர்ட் நின்னிஸ் கிச்சனை முதல்வர் ரங்கசாமி திறந்து வைத்து உரிமையாளர்கள் ஹரிஹரன். தமிழ் வேலு ஆகியோரை வாழ்த்தினார்




கலெக்டர் கிறிஸ்துராஜ் திருப்பூர் வெள்ளியங்காடு பகுதியில் உள்ள முதல்வர் மருந்தகத்தில் ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மேலாண்மை இயக்குநர் (திருப்பூர் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு கடன் சங்கம்) சரவணக்குமார் உள்ளார்.

## சாலைகளின் ஓரங்களில் உள்ள விளம்பர பேனர்கள் அகற்றம் கலெக்டர் இளம்பகவத் உத்தரவு

தூத்துக்குடி நெடுஞ்சாலை கோட்டத்திற்குட்பட்ட உட்கோட்டங்களின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் நடைமேடைகள், நடைபாதைகள், அனைத்து வகையான சாலைகளின் ஓரங்களிலும் அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள டிஜிட்டல் பேனர்கள் சிறிய விளம்பர டிஜிட்டல் பேனர்கள் மற்றும் விளம்பரபலகைகள் கண்டறிந்து அவற்றை அகற்ற வேண்டும் என கலெக்டர் இளம்பகத் உத்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து நெடுஞ்சாலை கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் அனுமதியின்றி வைக்கப்பட்ட அனைத்து வகையான விளம்பர பலகைகள் அகற்றப்பட்டதற்கான விரிவான அறிக்கை மற்றும்அகற்றப்பட்ட விளம்பரபலகைகள் குறித்த விவரங்களை உடன் அனுப்பி வைக்குமாறு அனைத்து உதவிக் கோட்டப்பொறியாளர்களுக்கு கோட்டப் பொறியாளர்சுற்றறிக்கைஅனுப்பியுள்ளார்.



# பராமைப்பு பணி: சென்னையில் 25 மின்சார ரெயில்கள் ரத்து

சென்னை, மார்ச்.13

சென்னை சென்டிரல் கூடூர் வழித்தடத்தில் உள்ள பொன்னேரி கவரைப்பேட்டை ரெயில் நிலையம் இடையே வரும் 13 மற்றும் 15 ஆகிய தேதிகளில் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை (6 மணி நேரம்) பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இதன்காரணமாக, அந்த வழித்தடத்தில் இயக்கப்படும் 25 மின்சார ரெயில்கள் ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரெயில்வே தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

முழுவதுமாக ரத்து

★ மூர்மார்க்கெட்டில் இருந்து வரும் 13 மற்றும் 15 ஆகிய தேதிகளில் காலை 8.05, 9, 9.30, 10.30, 11.35 ஆகிய நேரங்களில் புறப்பட்டு கும்மிடிப்பூண்டி செல்லும் மின்சார ரெயில்களும், மறுமார்க்கமாக, கும்மிடிப்பூண்டியில் இருந்து இதேதேதிகளில் 9.55, 11.25, மதியம் 12, 1, 2.30 மாலை 3.15 ஆகிய நேரங்களில் புறப்பட்டு மூர்மார்க்கெட் வரும் மின்சார ரெயில்களும் ரத்து செய்யப்படுகிறது.



★ மூர்மார்க்கெட்டில் இருந்து வரும் 13 மற்றும் 15 ஆகிய தேதிகளில் காலை 8.35, 10.15, மதியம் 12.10,1.05 ஆகிய நேரங்களில் புறப்பட்டு சூலூர்பேட்டை செல்லும் மின்சார ரெயில்களும், மறுமார்க்கமாக, சூலூர்பேட்டையில் இருந்து இதேதேதிகளில் காலை 11.45, மதியம் 1.15, 3.10 இரவு 9 ஆகிய நேரங்களில் புறப்பட்டு மூர்மார்க்கெட் வரும் மின்சார ரெயில்களும் ரத்து செய்யப்படுகிறது.

★ சென்னை கடற்கரையில் இருந்து வரும் 13 மற்றும் 15 ஆகிய தேதிகளில் காலை 9.40, மதியம் 12.40 ஆகிய நேரங்களில் புறப்பட்டு கும்மிடிப்பூண்டி செல்லும் மின்சார ரெயில்களும், மறுமார்க்கமாக, கும்மிடிப்பூண்டியில் இருந்து நாளை காலை 10.55 மணிக்கு புறப்பட்டு சென்னை கடற்கரை வரும் மின்சார ரெயிலும் ரத்து செய்யப்படுகிறது.

★ சூலூர்பேட்டையில் இருந்து வரும் 13 மற்றும் 15 ஆகிய தேதிகளில் மாலை 3.50 மணிக்கு புறப்பட்டு நெல்லூர் செல்லும் பயணிகள் ரெயிலும், நெல்லூரில் இருந்து இதேதேதிகளில் மாலை 6.45 மணிக்கு புறப்பட்டு சூலூர்பேட்டை செல்லும் பயணிகள் ரெயிலும் ரத்து செய்யப்படுகிறது.

★ மூர்மார்க்கெட்டில் இருந்து வரும் 13 மற்றும் 15 ஆகிய தேதிகளில் இரவு 11.40 மணிக்கு புறப்பட்டு ஆவடி செல்லும் மின்சார ரெயில் ரத்து செய்யப்படுகிறது.

பகுதி நேரரத்து

★ செங்கல்பட்டில் இருந்து வரும் 13 மற்றும் 15 ஆகிய தேதிகளில் காலை 9.55 மணிக்கு புறப்பட்டு கும்மிடிப்பூண்டி செல்லும் மின்சார ரெயில் சென்னை கடற்கரை கும்மிடிப்பூண்டி இடையே பகுதி நேர ரத்து செய்யப்பட்டு, சென்னை கடற்கரையில் நிறுத்தப்படும்.

★ கும்மிடிப்பூண்டியிலிருந்து வரும் 13 மற்றும் 15 ஆகியதேதிகளில் மாலை 3 மணிக்கு புறப்பட்டு தாம்பரம் வரும் மின்சார ரெயில் கும்மிடிப்பூண்டி சென்னை கடற்கரை இடையே பகுதி நேர ரத்து செய்யப்பட்டு, சென்னை கடற்கரையில் இருந்து புறப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை: ஆசிரியர் மீது போக்சோ வழக்கு

சேலம், மார்ச். 13

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட, வெள்ளாளபுரம் பகுதியில் செயல்பட்டு வரும் ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 50க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். இப்பள்ளியில் நாகர்கோவில் பகுதியை சேர்ந்த பிரான்சிஸ் ஆண்டனி (வயது 50) என்பவர் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். இவர் தாரமங்கலம், காட்டு பிள்ளையார் கோவில்தெருவில்உள்ள வாடகைவீட்டில்வசித்து வருகிறார். இவர் 2ம் வகுப்பு படித்து வரும் 7 வயது மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது. இது குறித்து மாணவி தனது பெற்றோரிடம் கூறினாள். இதனால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர் பள்ளி தலைமை ஆசிரியரிடம் புகார் அளித்தனர். அதன்பேரில் நேற்று கொங்கணாபுரம் வட்டார கல்வி அலுவலர் செந்தில், மாவட்ட குழந்தைகள் நல அலுவலர்கள், போலீசார் சம்பந்தப்பட்ட ஆசிரியரிடம் விசாரணை நடத்தினர். தொடர்ந்து சேலம் போலீசார், ஆசிரியர் மீது போக்சோசட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சந்திரசூடேஸ்வரர் ஆலய தேர் திருவிழா: நாளை உள்ளூர் விடுமுறை அறிவிப்பு



ஒசூர், மார்ச்.13

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் அருள்மிகு மரகதாம்பிகை சமேத ஸ்ரீ சந்திரசூடேஸ்வரர் ஆலயம் தேர்த் திருவிழா நடைபெற உள்ளது. இந்நிலையில் ஒசூர், சூளகிரி, தேன்கனிக்கோட்டை மற்றும் அஞ்செட்டி வட்டங்களில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் பள்ளி கல்லூரிகளுக்கு (சார்ஆட்சியர் அலுவலகம் உள்பட) வரும் 14ம் தேதி விடுமுறை அளிக்கப்படுவதாக மாவட்ட கலெக்டர் அறிவித்துள்ளார். ஆனால், அன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ள அரசு பொதுத் தேர்வுகள் அனைத்தும் வழக்கம் போல் நடைபெறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த உள்ளூர் விடுமுறை செலவாணி முறிச்சட்டம் கீழ் அறிவிக்கப்படவில்லை என்பதால், விடுமுறை நாளன்று மாவட்டத்தில் உள்ள கருவூலங்களும், சார்நிலைக் கருவூலங்களும் அரசு பாதுகாப்புக்கான அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு, குறிப்பிட்ட பணியாளர்களோடு செயல்படும் என்றும் இதனை ஈடு செய்யும் வகையில் வரும் 22ம் தேதி பணி நாளாக அறிவிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திமுகவின் போலி நாடகத்தை நம்பி ஏமாற இது 1960கள் அல்ல: அண்ணாமலை



சென்னை, மார்ச். 13

மும்மொழி கொள்கைக்கு ஆதரவாகதமிழக பாஜக சார்பில் 'சமக் கல்வி எங்கள் உரிமை' என்றதலைப்பில்கையெழுத்து இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. இதில், மும்மொழி கொள்கை வேண்டும் என ஒரு கோடி பேரிடம் கையெழுத்து பெறப்பட உள்ளது.

இந்தநிலையில், தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை எக்ஸ் தள பதிவில்,

திமுகவின் அறுபதாண்டு கால பொய்ப் பித்தலாட்டங்களைத் தமிழக மக்கள் முழுமையாகப் புரிந்து கொண்டு, சமக்கல்வி கையெழுத்து இயக்கத்திற்குப் பெருமளவில் ஆதரவளித்து வருகின்றனர். ஆனால், நாட்டு நடப்பே தெரியாமல், யாரோ எழுதிக் கொடுப்பதை வைத்து கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார்முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின். கண்களைத் திறந்து பாருங்கள் முதலமைச்சரே. உங்கள் போலி நாடகத்தை நம்பி ஏமாற இது 1960கள் அல்ல. அனைத்து குழந்தைகளுக்கும், தரமான, சமமான கல்வி கிடைப்பதை இனியும் உங்களால் தடுக்க முடியாது என பதிவிட்டுள்ளார்.

# நீலகிரியில் பொக்காபுரம் மாரியம்மன் தேரோட்டம்: ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம்

நீலகிரி, மார்ச்.13

நீலகிரி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற கோவில்களில் ஒன்றாக கூடலூர் அருகே உள்ள பொக்காபுரம் மாரியம்மன் கோவில் உள்ளது. இங்கு ஆண்டு தோறும் வருடாந்திர தேர் திருவிழா மிகவும் பிரசித்தி பெற்றது. கேரளா, கர்நாடக உள்பட வெளி மாநிலங்கள்மட்டுமின்றி கோவை, ஈரோடு, சேலம், திருப்பூர் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் திருத்தேர் விழாவில் கலந்து கொள்கின்றனர்.



கடந்த 07032025 அன்று பொக்காபுரம் மாரியம்மன் கோவில் விழா தொடங்கியது. தினமும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் அம்மன் பூ கரகம் எடுத்து முக்கிய சாலைகள் வழியாக ஊர்வலமாக கோவிலுக்கு வந்தனர். இந்நிலையில்நேற்று (10032025) இரவு 10 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட திருத்தேரில் சிம்ம வாகனத்தில் நீல நிற பட்டு சேலை அணிந்து மாரியம்மன் வீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது.

திருத்தேரை மாவட்ட கலெக்டர்லட்சுமிபவ்யா தண்ணீரு வடம் பிடித்து இழுத்துதொடங்கிவைத்தார். இதைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் திருத்தேரை இழுத்து அம்மனை தரிசித்தனர். முன்னதாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் ஊட்டி, கூடலூரில் இருந்து சிறப்பு பஸ்கள் இரவு பகலாக இயக்கப்பட்டது.

இந்நிலையில் இன்று காலை 8 மணிக்கு மாவிளக்கு பூஜை நடைபெற்றது.

இதற்கான ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத்துறை, பக்தர்கள் செய்திருந்தனர்.

# ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துவதா? எடப்பாடி பழனிசாமி கண்டனம்

சென்னை, மார்ச்.13

எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

2021ஆம் ஆண்டு தேர்தல் நேரத்தில் ஸ்டாலின் எதிர்க்கட்சித்தலைவராக நிறைவேற்ற முடியாத பல்வேறு வாக்குறுதிகளை அளித்து, வெற்றி பெற்று கடந்த 4 ஆண்டுகளாக நிர்வாகத் திறமையற்ற ஆட்சியை நடத்தி வருகிறார்.



2021 திமுக தேர்தல் அறிக்கையில், அரசு துறைகளில் 5.50 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும், வாக்குறுதி எண்.187 ன்படி தமிழகம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களில் காலியாக உள்ள பணியிடங்களில் 3 லட்சத்து 50 ஆயிரம் தமிழக இளைஞர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும், தற்போதைய முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாக்குறுதி அளித்தார்.ஆனால், உண்மையில் தமிழக அரசுத் துறைகளில், பணியில் இருந்து ஓய்வு பெற்றவர்களே ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் பணியமர்த்தப்படுகின்றனர். குறிப்பாக, தலைமைச் செயலகத்திலேயே பணி ஓய்வு பெற்று ஓய்வூதியம் வாங்கிக்கொண்டிருக்கும் பிரிவு அலுவலர்கள், சார்பு, துணை, இணை மற்றும் கூடுதல் செயலாளர்கள் நிலையில் பலர் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைக்கு, மாதம் 1 லட்சம் தொகுப்பு ஊதியத்தில், தற்காலிக ஆலோசகராக பணிபுரிவதற்கு, தலைமைச் செயலகத்தில் துணைச் செயலாளர் பதவி நிலைக்கு குறையாத பதவியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் 21.3.2025க்குள் விண்ணப்பிக்க நாளிதழ்களில் விளம்பரம் வந்துள்ளது. தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் எப்போது லட்சக்கணக்கான காலிப் பணியிடங்களைநிரப்பநடவடிக்கை எடுக்கும் என்று, தகுதி வாய்ந்த இலட்சக்கணக்கான இளைஞர்கள் தவமிருக்கும் நிலையில், அவர்களின்தலையிலும், மற்றும் தற்போது பதவி உயர்விற்காக காத்திருக்கும் நூற்றுக்கணக்கான அரசு ஊழியர்களின் தலையிலும், நிர்வாகத் திறனற்ற திமுகவின் ஸ்டாலின் மாடல் அரசின் இந்த விளம்பரம் பேரிடியாக விழுந்துள்ளது.

தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் உடனடியாக தேர்வு நடத்திஅரசுத்துறைகளில் காலியாக உள்ள அனைத்துப் பணியிடங்களையும் குறித்தகாலத்தில்நிரப்பி, படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற இந்த திமுக ஸ்டாலின் மாடல் அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாணவன் மீது தாக்குதல்: தாமாக முன் வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்தது தமிழ்நாடு எஸ்.சி., எஸ்.டி. ஆணையம்

ஸ்ரீவைகுண்டம், மார்ச்.12

தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் அருகே உள்ள அரியநாயகபுரத்தைச் சேர்ந்தவர் தங்க கணேசன். இவருடைய மனைவி மாலதி. இவர்களுக்கு தேவேந்திர ராஜ் (வயது 17) உள்பட 2 மகன்களும், ஒரு மகளும் உள்ளனர்.

தேவேந்திர ராஜ், நெல்லை பாளையங்கோட்டையில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளியில் பிளஸ்1 படித்து வருகிறார். தற்போது பிளஸ்1 பொதுத்தேர்வு நடைபெற்று வரும் நிலையில் நேற்று ஆங்கில தேர்வு நடந்தது. தேர்வு எழுதுவதற்காக நேற்று காலையில் வழக்கம்போல் தேவேந்திர ராஜ் தனியார் டவுன் பஸ்சில் பாளையங்கோட்டைக்கு புறப்பட்டார். அரியநாயகிபுரத்தைக் கடந்து பஸ் கெட்டியம்மாள்புரம் நிறுத்தம் பகுதியில் சென்றபோது ஒரு கும்பல் திடீரென்று பஸ்சை வழிமறித்தது. அந்த கும்பலைச் சேர்ந்தவர்கள் பஸ்சுக்குள் ஏறி சென்று தேவேந்திர ராஜை பிடித்து வெளியே இழுத்து வந்தனர். பின்னர் அவர்கள் தேவேந்திர ராஜை அரிவாளால் சரமாரியாகவெட்டினர்.



அவர்களிடம் இருந்து தப்பிக்க தேவேந்திரராஜ் ஓடினார். ஆனாலும் அவரை ஓட ஓட கும்பல் விரட்டி சென்று சரமாரியாக வெட்டியது. பின்னர் அந்த கும்பல் தப்பி சென்றது. அந்த வழியாக சென்றவர்கள் இதனைப் பார்த்து அதிர்ச்சி அடைந்து ஸ்ரீவைகுண்டம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். உடனே போலீசார் விரைந்து சென்று காயமடைந்த தேவேந்திர ராஜை மீட்டு சிகிச்சைக்காக ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக பாளையங்கோட்டை ஐகிரவுண்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதற்கிடையே, நெல்லை சரக போலீஸ் டி.ஐ.ஜி. மூர்த்தி, தூத்துக்குடி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஆல்பர்ட் ஜான் ஆகியோர் சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டனர். துணை போலீஸ் சூப்பிரண்டு ராமகிருஷ்ணன் தலைமையில் போலீசார் தனிப்படை அமைத்து பல்வேறு இடங்களிலும் சென்று விசாரித்தனர்.

கபடி போட்டியில் நிகழ்ந்த மோதல் காரணமாக ஏற்பட்ட முன்விரோதத்தில் மாணவர் தேவேந்திரராஜை கும்பல் வெட்டியதா? அல்லது காதல் விவகாரத்தில் தாக்கப்பட்டாரா? என பல்வேறு கோணங்களில் தீவிர விசாரணை நடத்தப்படுவதாக போலீசார் தெரிவித்தனர். தாக்குதல் தொடர்பாக ஸ்ரீவைகுண்டம் போலீசார் வன்கொடுமை தடுப்புச்சட்டம், கொலை முயற்சி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்தனர்.

மேலும், இந்த கொடூர சம்பவத்தில் ஈடுபட்டதாக கெட்டியம்மாள்புரத்தை சேர்ந்த 3 சிறுவர்களை போலீசார் கைது செய்தனர். அவர்களை ரகசிய இடத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனா். மாணவர் வெட்டப்பட்ட சம்பவம் நெல்லைதூத்துக்குடியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

இந்நிலையில் மாணவர் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக தாமாக முன் வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்தது தமிழ்நாடு எஸ்.சி. எஸ்.டி ஆணையம்.

மேலும் இந்த சம்பவத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து ஏப்ரல் 2ம் தேதிக்குள் விரிவான அறிக்கை தாக்கல் செய்ய தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் மற்றும் காவல் கண்காணிப்பாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# காஞ்சிபுரம் அருகே நாட்டு வெடிகுண்டு வீசி பிரபல ரவுடி கொலை

காஞ்சிபுரம், மார்ச்.13

காஞ்சிபுரம் அருகே பட்டப்பகலில் மக்கள் நடமாடும் பகுதியில், பிரபல ரவுடி ஒருவர் நாட்டு வெடிகுண்டு வீசி கொலை செய்யப்பட்டிருக்கும் சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம் திருக்காலிமேடு பகுதியை சேர்ந்த வசூல் ராஜா. இவர் மீது 20க்கு மேற்பட்ட கொலை கொலை முயற்சி மற்றும் ஆள் கடத்தல் உள்ளிட்ட வழக்குகள்நிலுவையில், உள்ளது.

இந்தநிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு சிறையில் இருந்து



வெளியே வந்த வசூல்ராஜாவை வீட்டின் அருகாமையில் பதுங்கி இருந்த 5 பேர் கொண்ட மர்ம கும்பல், நாட்டு வெடி குண்டு வீசி வெட்டிக் கொலை செய்துவிட்டு தப்பி ஓடியுள்ளனர். இந்த சம்பவம்குறித்துவிஷ்ணு காஞ்சி போலீசார்வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# கோடநாடு, கொலை, கொள்ளை வழக்கு : ஜெயலலிதாவின் முதன்மை பாதுகாப்பு அதிகாரியாக இருந்த வீரபெருமாள் ஆஜர்

கோவை, மார்ச்.13

கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு தொடர்பாக சி.பி.சி.ஐ.டி சிறப்பு விசாரணை குழு விசாரணையை தீவிரபடுத்தி உள்ளது. இந்நிலையில் கோடநாடு எஸ்டேட் மேலாளர் நடராஜனிடன் போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.அப்போது கடந்த ஜன 19 ஆம் தேதி சசிகலா கோடநாடு எஸ்டேட் வந்த போது, பங்களாவில் உள்ள அறைகளை பார்த்து விட்டு ஏதாவது கேட்டாரா ? என போலீசார் கேள்வி எழுப்பினார். ஆனால் சசிகலா ஏதும் கேட்கவில்லை என நடராஜன் கூறி இருந்தார்.

மேலும் கணினி ஆப்பரேட்டர் தினேஷ்குமார் தற்கொலை குறித்தும் நடராஜானிடன் கேள்வி எழுப்பட்டு உள்ளது. அன்று மாலை விசாரணை நிறைவடைந்து.

இந்நிலையில் முன்னாள் முதல்அமைச்சர் ஜெயலலிதா மற்றும் எடப்பாடி பழனிச்சாமிக்கு முதன்மை பாதுகாப்பு அதிகாரியாக இருந்த வீரபெருமாளை விசாரணைக்கு ஆஜராக சி.பி.சி.ஐ.டி போலீசார் சம்மன் அனுப்பி இருந்தனர். மேலும் இன்று மார்ச் 11 ஆம் தேதி நேரில் ஆஜராகவும் அறிவுறுத்தப்பட்டு இருந்தது.

அதே போல அப்போதைய பாதுகாப்பு பிரிவு ஆய்வாளராக இருந்த கனகராஜ் இறுதியாக விபத்தில் உயிரிழந்த ஜெயலலிதாவின் கார் ஓட்டுநர் கனகராஜுக்கு குறுஞ்செய்தி அனுப்பியது தொடர்பாகவும், அவர் தனது சொல் போனை இதுவரை ஒப்படைக்காதது குறித்து உயர் அதிகாரியாக இருந்த வீரபெருமாளிடம் விசாரணை மேற்கொள்ள உள்ளதாக கூறப்பட்டு இருந்தது.

இந்நிலையில் இன்று காலை முன்னாள் முதல் அமைச்சர் ஜெயலலிதாவின் முதன்மை பாதுகாப்பு அலுவலர் வீரபெருமாள் கோவை காந்திபுரத்தில் உள்ள சி.பி.சி.ஐ.டி அலுவலகத்தில் ஆஜராகி உள்ளார். அவரிடம் தற்பொழுது விசாரணை நடைபெற்று வருகிறது.

## தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையில் மருத்துவ ஆய்வக தொழில்நுட்புநர் பட்டயப்படிப்பு பயிற்சி

சென்னை, மார்ச்.13

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் தண்டையார்பேட்டையில் உள்ள தொற்றுநோய் மருத்துவமனையில் 202425ஆம் கல்வியாண்டிற்கான மருத்துவ ஆய்வக தொழில்நுட்புநர் பட்டயப்படிப்பு பயிற்சி தொடங்கப்பட உள்ளது. இப்பயிற்சி பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் வாரிசுகளுக்கும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயின்ற மாணவ, மாணவியருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மேலும் அரசு பள்ளிகள், அரசு சார்ந்த பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் பயின்ற மாணவ மாணவிகளும் விண்ணப்பிக்கலாம்.

மருத்துவ ஆய்வக தொழில்நுட்புநர் பட்டயப்படிப்பு (DMLT) (2024 25) பயிற்சிக்கு விண்ணப்பிக்க (+2 அறிவியல் பாடப்பிரிவில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்) தமிழ்நாடு அரசு விதிகளின்படி ஒற்றை சாளர முறையில் சமூகம் வாரியாக சுழற்சி முறையில் மாணவிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் இயக்குநர்(பொ) தொ.நோ.ம.மனை. எண்.187திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தண்டையார்பேட்டை, சென்னை 600 081ல் உள்ள தொற்றுநோய் மருத்துவமனை அலுவலகத்தில் 12.03.2025 முதல் 21.03.2025 வரை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை அனைத்து நாட்களிலும் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 21:03.2025 மாலை 5.00 மணிக்குள் மேற்குறிப்பிட்டுள்ள முகவரிக்கு வந்துசேறுமாறு அனுப்ப வேண்டும். அதன் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப் படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தி மொழியை திணிப்பவர்களுக்கு 2026 தேர்தலில் மக்கள் தகுந்த பதிலடியை தருவார்கள்: அமைச்சர் பேட்டி

சென்னை, மார்ச்.13

தமிழில் அர்ச்சனை செய்ய விரும்புவோர் தமிழ் வழி அர்ச்சகர் மூலம் வழிபடலாம் என்று சென்னையில் அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு பேட்டி அளித்துள்ளார். சென்னை கிழக்கு திமுக மாவட்டம் சார்பாக எழும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புளியந்தோப்பு கே.பி.பார்க் ஹவுசிங் போர்டு மற்றும் சூளை பகுதிகளில் அன்னம் தரும் அமுதகரங்கள் நிகழ்வில் அமைச்சர் சேகர்பாபு மற்றும் மேயர் பிரியா ஆகியோர் கலந்துக்கொண்டு பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார். இதையடுத்து அமைச்சர் சேகர் பாபு செய்தியாளர்களை சந்தித்து பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது; 13 போற்றி புத்தகங்கள் தமிழில் அறிமுகப்படுத்தியுள்ளோம். இதனை கொண்டு வந்தவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அன்னை தமிழ் அர்ச்சனை செய்யக்கூடியவரின் பெயர் மற்றும் அலைபேசி எண்ணை காட்சிப்படுத்தியுள்ளோம். யார் தமிழில் அர்ச்சனை செய்ய விரும்பினாலும் தமிழ் வழி அர்ச்சகர் மூலம் வழிபடலாம். அதே நேரம் சமஸ்கிருதம் மொழி வழிபாட்டுக்கும் நாங்கள் எந்த தடையும் செய்யவில்லை. தேவாரம் என்றாலும், திருவாசகம் என்றாலும் அர்ச்சனை என்றாலும் தமிழ் தான்.

நங்கள் எந்த மொழிக்கும் எதிரானவர்கள் அல்ல. ஒரு மொழியை திணிக்கும் பொழுது அதற்க்கு எதிர்த்து நிற்கிறோம். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் அது தான் நம் அரசு. ஆகவே தமிழும் அர்ச்சனையில் இருக்கும். வாழ்க தமிழ் வளர்க தமிழ் இது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொள்கை. இந்தி மொழியை திணிப்பவர்களுக்கு 2026 தேர்தலில் மக்கள் தகுந்த பதிலடியை தருவார்கள். காலை சிற்றுண்டியால் பலர் பலன் பெறுகின்றனர். மக்கள் பணி எங்களை உற்சாகப்படுத்துகிறது என்று கூறியுள்ளார்.

## மார்ச் 22ல் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டம் நடத்த தமிழ்நாடு அரசு உத்தரவு

சென்னை. மார்ச்.13

மார்ச் 22ல் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டம் நடத்த தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. உலக தண்ணீர் தினமான மார்ச் 22ஆம் தேதி கிராம



சபைக் கூட்டம் நடத்த தமிழ்நாடு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. சுத்தமான குடிநீர் விநியோகத்தினை உறுதி செய்தல் குறித்து கிராம சபைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படுகிறது.

## அதிமுக முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் மீதான சொத்துக்குவிப்பு வழக்கின் விசாரணை ஒத்திவைப்பு

சென்னை, மார்ச்.13

அதிமுக முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் மீதான சொத்துக்குவிப்பு வழக்கின் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. சி.விஜயபாஸ்கர்வழக்கை மார்ச் 24க்கு ஒத்திவைத்து புதுக்கோட்டைமாவட்ட சார்பு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. சொத்துக்குவிப்பு வழக்கில் சி.விஜயபாஸ்கரும் அவரது மனைவி ரம்யாவும் நேரில் ஆஜராகவில்லை.

## மும்மொழிக் கொள்கையை அறிவுள்ளவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்: அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் பேட்டி

மதுரை, மார்ச்.13

மும்மொழிக் கொள்கையை அறிவுள்ளவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார். அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்; தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கை எடுத்துக் கொண்டதால் நல்ல பலன் கிடைத்துள்ளது.



இந்தியாவில் எங்குமே மும்மொழிக் கொள்கை முழு அளவில் இல்லை.

தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கை அமலில் இருந்தாலும் சிறப்பான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

ஒருமொழிக்கொள்கையைக்கூட முழுமையாக நிறைவேற்ற முடியாதவர்கள் நம் மீது மும்மொழி கொள்கையை திணிக்க பார்க்கிறார்கள் என அவர் கூறினார்.

## திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு அருகே லட்சுமிபுரம் சுங்கச்சாவடியை பொதுமக்கள் சூறையாடியதால் பரபரப்பு

திண்டுக்கல், மார்ச்.13

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு அருகே லட்சுமிபுரம் சுங்கச்சாவடியை பொதுமக்கள் சூறையாடியதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு அருகே லட்சுமிபுரம் என்ற பகுதியில் தேசிய நெடுஞ்சாலை சார்பில் சுங்கச்சாவடி அமைக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல்லில் இருந்து கும்மி வரை நான்குவழி சாலையாக திட்டம் தொடங்கப்பட்ட நிலையில் தற்போது திண்டுக்கல்லில் இருந்து வத்தலகுண்டு வரை இருவழிச்சாலை மட்டுமே அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. 4 வழிச்சாலை பணிகள் முழுமையாக நிறைவு பெறாமல் சுங்கச்சாவடி செயல்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு பல ஆண்டுகள் பொதுமக்கள், விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இன்று காலை சுங்கச்சாவடியை திறப்பதற்குசுங்கச்சாவடி நிர்வாகம் ஏற்பாடுகளை செய்தது. இதற்கு அப்பகு



தியிலுள்ள விவசாயிகளும், பொதுமக்களும் கடும் எதிர்ப்புகளை தெரிவித்தனர். இன்று காலை சரியாக 8 மணி அளவில் சுங்கச்சாவடி செயல்பாட்டிற்கு வரும் நிலையில் திடீரென சுங்கச்சாவடி அடித்து நொறுக்கப்பட்டது. சுங்கச்சாவடியில் இருந்த அனைத்து உபகரணங்களும் உடைத்து சேதப்படுத்தப்பட்டன. இதனால் அப்பகுதியில் பதற்றமும், பரபரப்பும் நிலவியது. சுங்கச்சாவடிக்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்கள், விவசாயிகள் மற்றும் பெண்கள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் சுங்கச்சாவடியை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தி வருகின்றனர்.

பட்டினம்பட்டி காவல் துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## புதிய கண்டுபிடிப்பு போட்டி: தேசிய அளவில் முதலிடம் பிடித்த மாணவனுக்கு நெல்லை டி.ஐ,ஜி. பாராட்டு

திருநெல்வேலி, மார்ச்.13

என்.சி.சி. மாணவர்களுக்கான புதிய கண்டுபிடிப்புபோட்டியில்தேசிய அளவில் முதலிடம் பெற்ற நெல்லையைச் சேர்ந்த என்.சி.சி. மாணவன் டேவிட் சாலமோனுக்கு நெல்லை சரக டி.ஐ.ஜி. பா.மூர்த்தி கேடயம் வழங்கி பொன்னாடை அணிவித்து பாராட்டினார். தேசிய அளவில்என்.சி.சி. மாணவர்களுக்கு இடையேயானபுதியகண்டுபிடிப்பு போட்டி கடந்த ஜனவரி மாதம் புதுடெல்லியில் நடைபெற்றது.

இப்போட்டியில் பாளையங்கோட்டை தூய சவேரியார் மேல்நிலைப் பள்ளியின் என்.சி.சி.யில் உள்ள 9ம்



வகுப்பு மாணவன், டேவிட் சாலமோன் தமிழ்நாடு சார்பாக பங்கு பெற்று தனது கண்டுபிடிப்பிற்காக முதல் பரிசு பெற்றுள்ளார். அம்மாணவன், பூமியில் புதைக்கப்பட்டுள்ள கன்னிவெடிகளை முன்கூட்டியே கண்டறிந்து எச்சரிக்கை செய்யும் உபகரணங்களை கண்டுபிடித்துள்ளார்.

அம்மாணவனின் கண்டுபிடிப்பு அகில இந்திய அளவில் முதல் பரிசு பெற்றுள்ளது. முதல் பரிசு பெற்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்த நெல்லை மாவட்டம், பாளையங்கோட்டையில் உள்ள தூய சவேரியார் மேல்நிலைப்பள்ளி மாணவன் டேவிட் சாலமோனுக்கு நெல்லை சரக டி.ஐ.ஜி. பா.மூர்த்தி கேடயம் மற்றும் மரக்கன்று வழங்கி பாராட்டினார். மேலும் அவர் அம்மாணவனுடைய கண்டுபிடிப்பு குறித்து முழுமையாக கேட்டறிந்து அம்மாணவன் மேலும் பல சாதனைகளை நிகழ்த்த வாழ்த்தினார். இந்த நிகழ்வில் வரம் அறக்கட்டளை நிறுவனரும் பொறியாளருமான நாகராஜ், தூய சவேரியார் மேல்நிலைப் பள்ளியின் என்.சி.சி. அலுவலர் அருள்ராஜ், தமிழ்நாடு என்.சி.சி. 5வது பட்டாலியனை சேர்ந்த சுபேதார் பாண்டி மற்றும் சமூக ஆர்வலர்கள் கோபாலகிருஷ்ணன், சதீஷ்குமார், கமலக்கண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## இயக்குனர் ஷங்கரின் ரூ.10.11 கோடி சொத்து முடக்கத்துக்கு இடைக்கால தடை: சென்னை ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, மார்ச்.13

தமிழ் சினிமாவில் பிரமாண்ட இயக்குனராக வலம் வரும் ஷங்கரின் கடைசி 2 படங்களான கமல்ஹாசனின் 'இந்தியன் 2', ராம்சரணின் 'கேம் சேஞ்சர்' ஆகியவை வசூல் ரீதியில் தோல்வியை தழுவின.

இந்த நிலையில், 'எந்திரன்' படத்தின் கதை காப்புரிமை தொடர்பாக ஷங்கர் மீது அமலாக்கத்துறை வழக்குப் பதிவு செய்தது.

இது தொடர்பான வழக்கு நடந்து வரும் நிலையில், முதற்கட்டமாக ரூ.10.11 கோடி மதிப்பிலான அவரின் 3 சொத்துக்களை அமலாக்கத்துறை முடக்கி நடவடிக்கை எடுத்தது.

இது குறித்து அப்போது கருத்து தெரிவித்த இயக்குனர் ஷங்கர், "அமலாக்கத்துறையின் நடவடிக்கை சட்ட செயல்முறையின் அப்பட்டமான துஷ்பிரயோகத்தை குறிக்கிறது. அதிகாரிகள் தங்களது நடவடிக்கையை மறுபரிசீலனை செய்வார்கள் என நம்புகிறேன். மறுபரிசீலனை செய்யவில்லை என்றால் அம




லாக்கத்துறை உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்வேன்" என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில், இயக்குனர் ஷங்கர் தொடுத்த வழக்கு சென்னை ஐகோர்ட்டில் இன்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், என்.செந்தில் குமார் ஆகியோர், இயக்குனர் ஷங்கரின் ரூ.10.11 கோடி சொத்துக்களை முடக்கிய அமலாக்கத்துறையின் உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்தனர். மேலும், விசாரணையை ஏப்ரல் 21ந் தேதிக்கு தள்ளிவைத்தனர். அதற்குள் அமலாக்கத்துறை தரப்பில் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

## கோவை: பொதுமக்களை அச்சுறுத்திய சிறுத்தை பிடிபட்டது

கோவை, மார்ச்.13

கோவை மாவட்டம் ஓணாப்பாளையம் பகுதியில் சிறுத்தை நடமாட்டம் இருந்து வந்தது. கடந்த சில நாட்களுக்கு முன்அப்பகுதியில் உள்ள ஒரு வீட்டில் 4 ஆடுகளை சிறுத்தை வேட்டையாடியது. இது தொடர்பான வீடியோ சமூகவலைதளத்தில் வைரலானது. மேலும், சிறுத்தை பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாக இருந்ததால் அதை



பிடிக்க வனத்துறையினர் நடவடிக்கை எடுத்து வந்தனர். இந்நிலையில், பூச்சியூர் பகுதியில் உள்ள பாழடைந்த கட்டிடத்தில் சிறுத்தை பதுங்கி இருந்தது. இது குறித்து தகவலறிந்த வனத்துறையினர்சிறுத்தைக்குமயக்க ஊசி செலுத்தினர். ஆனாலும், சிறுத்தைதொடர்ந்து தப்பியோட முயற்சித்தது. அப்போது, வனத்துறையினர் சிறுத்தையை வலைவீசி பிடித்தனர். சிறுத்தையை வனப்பகுதிக்குள் விட வனத்துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## திருத்துறைப்பூண்டி அருகே குழாய் உடைப்பால் வீணாகும் குடிநீர்; உடனே நடவடிக்கை எடுக்க கோரிக்கை


திருத்துறைப்பூண்டி, மார்ச்.13

திருத்துறைப்பூண்டி அருகே குழாய் உடைப்பால் குடிநீர் வீணாக சாக்கடையில் கலக்கிறது. எனவே நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருத்துறைப்பூண்டி திருத்துறைப்பூண்டி தாலுகா பகுதியில் கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. நகர பகுதியில் தினந்தோறும், சில கிராமங்களில் வாரத்திற்கு ஒரு முறை, சில கிராமங்களில் 15 நாளைக்கு ஒருமுறை குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது கோடை காலம் தொடங்குவதால், தண்ணீர் தட்டுபாடு ஏற்படும் சூழல் உள்ளது. இந்நிலையில், பல இடங்களில் அடிக்கடி குழாய்கள் உடைப்பு ஏற்பட்டு, குடிநீர் வீணாக சாலையில் ஓடுகிறது. இதுகுறித்து புகார் அளித்தால் பல நாட்களுக்கு பிறகு சரி செய்வது வழக்கம்.

இந்நிலையில் திருத்துறைப்பூண்டி காமராஜர் சிலை அருகில் நெடும்பலம் ஊராட்சிக்கு செல்லும் கொள்ளி



டம் கூட்டு குடிநீர்திட்டத்தின் கீழ் செல்லும் குழாய்கள் கடந்த 50 நாட்களுக்கு மேலாக உடைந்துள்ளது. இதுவரை சரி செய்யதால் பல ஆயிரம் லிட்டர் குடிநீர் வீணாக சாக்கடையில் கலக்கிறது.

இது சம்பந்தப்பட்ட துறைகளுக்கு நேரில் புகார் தெரிவித்தும் இது வரை நடவடிக்கை இல்லை, எனவே புகார் அளித்தும் இதுவரை நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீது உரியநடவடிக்கைஎடுக்கவேண்டும் என்று மாவட்ட கலெக்டருக்கு நகர விவசாயிகள் சங்கநகரசெயலாளர்ராமலிங்கம் கோரிக்கை மனு அனுப்பி உள்ளார்.

## செங்கம் அருகே 5 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து

செங்கம், மார்ச்.13

செங்கம் அருகே தேசிய நெடுஞ்சாலையில் தேங்கிய மழை நீரால் 5 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டது. தண்டம்பட்டு ஏரியில் இருந்து வெளியேறிய உபரி நீர் தேசிய நெடுஞ்சாலையில் தேங்கியது.

## சென்னையில் மழை நீர் வெளியேற வெட்டி வைத்திருந்த கால்வாயில் விழுந்த குழந்தைக்கு சிகிச்சை

சென்னை ஓஎம்ஆர் பாண்டியன் சாலையில் கால்வாயில் விழுந்த மூன்றரை வயது குழந்தை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. மழை நீர் வெளியேற வெட்டி வைத்திருந்த கால்வாயில் குழந்தை தவறி விழுந்தது.

## கனமழை எச்சரிக்கை காரணமாக தூத்துக்குடி மீனவர்கள் 2வது நாளாக கடலுக்கு மீன் பிடிக்க செல்லவில்லை

தூத்துக்குடி, மார்ச்.13

கனமழை எச்சரிக்கை காரணமாக தூத்துக்குடி மீனவர்கள் 2வது நாளாக கடலுக்கு மீன் பிடிக்க செல்லவில்லை 1,000க்கும் மேற்பட்ட நாட்டுபடகு, பைபர் படகு மீனவர்கள் 500க்கும் மேற்பட்ட விசைப்படகு மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை.



தினகனி



# மின்னல் தாக்கி ஓய்வு பெற்ற ஏட்டு உள்பட 2 பேர் பலி



உளுந்தூர்பேட்டை, மார்ச்.13

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் நேற்று இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. உளுந்தூர்பேட்டை அருகே பாலி கிராமத்தை சேர்ந்த ஓய்வு பெற்ற தலைமை காவலர் காசிலிங்கம் (70) மற்றும் களமருதூர் கிராமத்தை சேர்ந்த ராமர் (65), இவரது பேரன் சூர்யா (25) ஆகிய 3 பேரும் நேற்று 2 இருசக்கர வாகனத்தில் திருச்சி ரோட்டில் இருந்து உளுந்தூர்பேட்டை சென்று கொண்டிருந்தனர்.

அரசு தொழிற்பயிற்சி நிலையம் அருகே சென்றபோது பலத்த மழையின் காரணமாக வாகனத்தை சாலையோரம் நிறுத்திவிட்டு புளிய மரத்தின் கீழ் 3 பேரும் மழைக்கு ஒதுங்கி நின்றிருந்தனர். அப்போது திடீரென மின்னல் தாக்கியதில் காசிலிங்கம் மற்றும் ராமர் ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே சுருண்டு விழுந்து உயிரிழந்தனர். படுகாயத்துடன் கிடந்த சூர்யா உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

# திசையன்விளை அருகே புற்றுநோயால் இறந்த தந்தையின் உடலுக்கு அஞ்சலி செலுத்தி விட்டு பிளஸ் 2 தேர்வு எழுதிய மகள்



திசையன்விளை, மார்ச்.13

திசையன்விளை அருகே தந்தை புற்றுநோயால் இறந்த நிலையில் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தி விட்டு மகள் பிளஸ் 2 தேர்வு எழுதிய சம்பவம் உருக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. நெல்லை மாவட்டம், திசையன்விளை அருகே உள்ள வடலிவிலை பகுதியை சேர்ந்தவர் அய்யாதுரை (55). விவசாயியான இவருக்கு பானுமதி என்ற மனைவியும், 3 மகன்கள் மற்றும் மதுமிதா (17) என்ற ஒரு மகள் உள்ளனர். மதுமிதா இட்டமொழியில் உள்ள ஏ.பி ஜோசப் அரசு மேல்நிலைப்பள்ளியில் பிளஸ் 2 படித்து வருகிறார். கேன்சர் நோயால் அவதிப்பட்டு வந்த அய்யாதுரை அதற்காக சிகிச்சை மேற்கொண்டு வந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு அய்யாதுரை திடீரென உயிரிழந்தார். பிளஸ் 2 பொது தேர்வு நடந்து வரும் நிலையில் நேற்று நடந்த கணக்கு தேர்வுக்காக மதுமிதா தயாராகிக்கொண்டிருந்தார்.

திடீரென தந்தை இறந்ததால் பெரும் துயரத்தில் இருந்த மதுமிதா, தேர்வை தவற விடக்கூடாது என்பதற்காக நேற்று காலை இறந்த தந்தையின் உடலை வணங்கி விட்டு தேர்வு எழுத சென்றார். தேர்வு முடிந்து மதுமிதா வந்த பிறகு அய்யதுரையின் இறுதி சடங்கு நடந்தது. தந்தையின் உடலை வணங்கி விட்டு மகள் தேர்வு எழுத சென்ற சம்பவம் திசையன்விளையில் உருக்கத்தை ஏற்படுத்தியது.

# கோவை அருகே இருகூர்பீளமேடு இடையே தண்டவாளத்தில் சிமெண்ட் சிலாப் வைத்து சென்னை ரயிலை கவிழ்க்க சதி: மற்றொரு ரயில் லோகோ பைலட் பார்த்ததால் தப்பியது



கோவை, மார்ச்.13

கோவையில் நேற்று முன்தினம் இரவு தண்டவாளத்தில் சிமெண்ட் சிலாப் வைத்து சென்னை ரயிலை கவிழ்க்க சதி நடந்துள்ளது. மற்றொரு டிராக்கில் சென்ற ரயிலின் லோகோ பைலட் பார்த்து தகவல் கூறியதால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. கோவை சிங்காநல்லூர் ரயில் நிலையம் அருகே இருகூர் பீளமேடு ரயில்வே தண்டவாளத்தில் நேற்று முன்தினம் இரவு 10.15 மணிக்கு சேலம் வழியே செல்லும் திருப்பதிகோவை எக்ஸ்பிரஸ் கடந்து சென்றது. அந்த ரயிலின் லோகோ பைலட் கோவைசேலம் மார்க்க ரயில் பாதையில் தண்டவாளத்தில் பெரிய அளவிலான சிமெண்ட் சிலாப் வைக்கப்பட்டிருந்ததை பார்த்தார்.

இதனால் அதிர்ச்சியடைந்த அவர், கோவை ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டருக்கும், சேலம் ரயில்வே கோட்ட கட்டுப்பாட்டு அறைக்கும் தகவல் கொடுத்தார். இதனை தொடர்ந்து கோவை ஆர்பிஎப் இன்ஸ்பெக்டர் கிரீஷ் தலைமையிலான போலீசாரும், கோவை ரயில்வே போலீஸ் டிஎஸ்பி பாபு தலைமையிலான போலீசாரும் சம்பவ இடத்துக்கு சென்று விசாரித்தனர். சிங்காநல்லூர் ரயில்வே கேட் கீப்பர் உள்ளிட்ட ஊழியர்கள் சம்பவ இடத்துக்கு சென்று தண்டவாளத்தில் இருந்து அந்த சிமெண்ட் சிலாப்பை அகற்றினர்.

இந்த ரயில் பாதை வழியே நேற்று முன்தினம் இரவு கோவையில் இருந்து சேலம் வழியே செல்லும் மங்களூரு சென்னை எக்ஸ்பிரஸ், மேட்டுப்பாளையம் சென்னை செல்லும் நீலகிரி எக்ஸ்பிரஸ், எர்ணாகுளம் பாட்னா எக்ஸ்பிரஸ், கோவை சென்னை சேரன் எக்ஸ்பிரஸ் ஆகியவை அடுத்தடுத்து வர இருந்தன. தண்டவாளத்தில் சிமெண்ட் சிலாப்பை வைத்து ரயிலை கவிழ்க்க மர்மநபர் சதி திட்டம் தீட்டியிருப்பது தெரியவந்துள்ளது.

எதிரே வந்த ரயிலின் லோகோபைலட் பார்த்து உரிய நேரத்தில் தகவல் கூறியதால் சிலாப் அகற்றப்பட்டு பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டு பயணிகள் காப்பாற்றப்பட்டுள்ளனர். ரயிலை கவிழ்க்க நடந்த இந்த சதி திட்டம் கோவையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவம் குறித்து கோவை ரயில்வே போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தினர்.

சம்பவம் நடைபெற்ற பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளை போலீசார் நேற்று ஆய்வு செய்தனர். அப்போது வாலிபர் ஒருவர் அடிக்கடி அந்த பகுதியில் நடந்து சென்றிருக்கும் காட்சிகள் பதிவாகி இருந்தது. இது தொடர்பாக போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். கேமராவில் பதிவாகி இருந்த நபர் யார்? என்பது குறித்து அப்பகுதி மக்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். ஓரிரு நாளில் சதிவேலையில் ஈடுபட்டவர்கள் பிடிபடுவார்கள் என்று ரயில்வே போலீசார் தெரிவித்தனர்.

# கார்மேக போர்வையில் ‘இளவரசி’ கொட்டியது மழைச்சாரல் கொடைக்கானல் ‘ஜில்ஜில்…’; பகல் பொழுதிலே வாகன விளக்குகள் ‘பளிச்’

கொடைக்கானல், மார்ச்.13

கொடைக்கானலில் தொடர் சாரல் மழையால் இதமான சூழல் நிலவியது.

நகரை சூழ்ந்த மேகமூட்டத்தால் பகலிலேயே வாகனங்கள் முகப்பு விளக்குகளை எரிய விட்டபடி சென்றன. திண்டுக்கல் மாவட்டத்தில் ‘மலைகளின் இளவரசி’ என அழைக்கப்படும் கொடைக்கானலில் கடந்த சில வாரங்களாக வறண்ட வானிலை நிலவி வந்தது. இதனால் கொடைக்கானலில் உள்ள தனியார் நிலங்களிலும், வனப்பகுதிகளிலும் அவ்வப்போது காட்டுத்தீ ஏற்பட்டது.

இதில் ஏராளமான மரங்கள் எரிந்ததால் ஆங்காங்கு புகைமண்டலமாக காட்சியளித்தது. கொடைக்கானலில் நேற்று அதிகாலை முதலே வானில் கார்மேக கூட்டம் திரண்டிருந்தது. காலை 10 மணி முதல் சாரல் மழை பெய்ய துவங்கியது. நகர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் மழை மேகம் சூழ்ந்து காணப்பட்டதால் கடும் குளிர் நிலவியது.

இந்த தொடர் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. மேலும் கரும்மேக கூட்டங்களால் பகலிலே இருள் சூழ்ந்து கொண்டதால் சாலைகளில் வாகனங்கள் முகப்பு விளக்கை எரியவிட்டபடி சென்றன. மேலும் தொடர் மழையால் சுற்றுலா இடங்கள் அனைத்தும் சுற்றுலா பயணிகளின்றி வெறிச்சோடி காணப்பட்டது.

இதுகுறித்து வனத்துறையினர் கூறுகையில், ‘‘தற்போது பெய்து வரும் தொடர் சாரல் மழையால் வனப்பகுதியில் வறண்ட சூழல் மாறி காட்டுத்தீ பரவல் கட்டுக்குள் வந்தது’’ என்றனர்.

# மலைப்பகுதிகளில் தனியார் நிலங்களில் மரம் வெட்டடும் எடுத்துச் செல்லவும் ஆன்லைன் முறையில் அனுமதி

சென்னை, மார்ச்.13

மலைப்பகுதிகளில் தனியார் நிலங்களில் மரம் வெட்டடும் எடுத்துச் செல்லவும் ஆன்லைன் முறையில் அனுமதி தர மலைத்தளம் என்ற புதிய இணையதளம் பயன்பாட்டுக்கு வந்துள்ளதாக வனத்துறை தகவல் தெரிவித்துள்ளது.

# ’2025 அற்புதமான ஆண்டு…என்னுடைய மூன்று படங்கள் வெளியாகின்றன’ மாளவிகா மோகனன்



தென்னிந்திய சினிமாவில் பிரபல நடிகையாக வலம் வரும் மாளவிகா மோகனன் கடைசியாக 'யுத்ரா' என்ற இந்தி படத்தில் நடித்திருந்தார். இதனைத் தொடர்ந்து தமிழில் கார்த்தி நடிக்கும் 'சர்தார் 2', மலையாளத்தில் மோகன்லால் நடிக்கும் 'ஹிருதயப்பூர்வம்' மற்றும் தெலுங்கில் பிரபாஸ் நடிக்கும் 'தி ராஜா சாப்' படத்தில் நடித்து வருகிறார்.

இந்த நிலையில் சமூக வலைதளங்களில் மிகவும் படு ஆக்டிவாக இருக்கும் மாளவிகா மோகனன் தனது எக்ஸ் பக்கத்தில் ரசிகர்களுடன் உரையாடினார். அப்போது ஒரு ரசிகர் அவரிடம், அடுத்ததாக வெளியாக உள்ள உங்கள் படம் எது? என்று கேட்டார்.

அதற்கு பதிலளித்த மாளவிகா மோகனன், 'தெலுங்கு 'தி ராஜாசாப்', தமிழ் 'சர்தார்2', மலையாளம் 'ஹிருதயப்பூர்வம்'. 2025 அற்புதமான ஆண்டாக இருக்கும்' என்றார். மேலும் , பல கேள்விகளுக்கு மாளவிகா பதிலளித்திருக்கிறார்.

# 3 வருடங்களுக்கு பிறகு தெலுங்கு படத்தில் நடிக்கும் கயாடு லோஹர்



அசாம் மாநிலம் தேஜ்பூரை சேர்ந்தவர் கயாடுலோஹர். இவர் கடந்த 2021ம் ஆண்டு மனோரஞ்சன் நடிப்பில் வெளியான 'முகில்பேட்டை' என்ற கன்னட படத்தின் மூலம் நடிகையாக அறிமுகமானார்.

அதனைத்தொடர்ந்து, 2022ம் ஆண்டு வெளியான ஸ்ரீ விஷ்ணு நடித்த 'அல்லூரி' மூலம் தெலுங்கில் அறிமுகமானார். இந்த படம் வரவேற்பை பெறவில்லை. அதனையடுத்து அவருக்கு தெலுங்கு பட வாய்ப்பு வரவில்லை.

அதன்பின்னர் ஒரு மராத்தி மற்றும் மலையாளப் படத்தில் நடித்திருக்கிறார். இருந்தபோதும், அவரின் பெயர் அந்த அளவிற்கு வெளியில் தெரியவில்லை. தமிழில் பிரதீப் ரங்கநாதனுக்கு ஜோடியாக 'டிராகன்' படத்தில் நடித்தற்கு பிறகு மிகவும் பிரபலமாகி இருக்கிறார் கயாடு லோஹர். இதன் காரணமாக அவருக்கு பட வாய்ப்புகள் குவிந்து வருகின்றன. அதன்படி தற்போது கயாடு, தனது 2வது தெலுங்கு படத்தில் நடிக்க உள்ளார். மூன்று வருடங்களுக்குப் பிறகு மீண்டும் தெலுங்கில் நடிக்கிறார். கிஷோர் திருமலா இயக்கத்தில் ரவி தேஜா நடிப்பில் உருவாக இருக்கும் புதிய படத்தில் கயாடு ஒப்பந்தமாகியுள்ளதாக தெரிகிறது. இந்த படத்தில் இரண்டு ஹீரோயின்கள் உள்ளதாக கூறப்படுகிறது.

# வார் 2 படப்பிடிப்பில் ஹிருத்திக் ரோஷன் காயம்



பாலிவுட்டின் முன்னணி சூப்பர் ஸ்டார் நடிகராக வலம் வருபவர் ஹிருத்திக் ரோஷன். இவர் நடிப்பில் கடந்த 2019ம் ஆண்டு வார் படம் வெளியானது. இப்படம் நல்ல வரவேற்பை பெற்றது. இதில் டைகர் ஷ்ராப் மற்றும் வாணி கபூர் ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். இப்படத்தில் ஹிருத்திக் ரோஷன் மேஜர் கபீர் தலிவாலாக நடித்திருந்தார்.

அதனைதொடர்ந்து, யாஷ்ராஜ் பிலிம்ஸின் ஸ்பை யுனிவர்ஸ் 'வார் 2' படத்தை தயாரித்து வருகிறது. இந்தப்படத்தில் ஹிருத்திக் ரோஷன் மீண்டும் மேஜர் கபீர் தலிவாலாக நடிக்கிறார். இந்த படத்தை 'பிரம்மாஸ்திரா' பட இயக்குனர் அயன் முகர்ஜி இயக்குகிறார். ஜூனியர் என்.டி.ஆர் மற்றும் கியாரா அத்வானி ஆகியோர் இந்தப்படத்தில் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து வருகின்றனர்.

இந்த நிலையில், இந்தப் படத்துக்கான நடனக்காட்சியை மும்பையில் படமாக்க இருந்தனர். இதற்கான ஒத்திகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது ஹிருத்திக் எதிர்பாராதவிதமாக கீழே விழுந்தார். இதில் அவர் காலில் பலத்த காயம் ஏற்பட்டது. அவரை பரிசோதித்த மருத்துவர்கள் 1 மாதம் ஓய்வெடுக்க அறிவுறுத்தியுள்ளனர். இதனால் படப்பிடிப்பு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

# தேர்வுக்குழுவில் ஒருவருக்கு கூட கிரிக்கெட் தெரியாது பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தை சாடிய அப்ரிடி

9வது ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி தொடரில் நியூசிலாந்தை வீழ்த்தி இந்தியா சாம்பியன் பட்டம் வென்றது. இதில் விளையாடிய அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்ற இந்தியா தோல்வியே சந்திக்காமல் கோப்பையை கைப்பற்றியது.

இந்த தொடரில் நடப்பு சாம்பியனாக களமிறங்கிய பாகிஸ்தான் அணி ஒரு வெற்றி கூட பெறாமல் தனது பிரிவில் (ஏ பிரிவு) கடைசி இடம் பிடித்து பரிதாபமாக வெளியேறியது. இதனால் அந்த அணியை அந்நாட்டின் பல முன்னாள் வீரர்கள் விமர்சித்து வருகின்றனர்.

இந்நிலையில் சமீபத்தில் டிவி நிகழ்ச்சி ஒன்றில் பேசிய முன்னாள் பாகிஸ்தான் கேப்டன் ஷாஹித் அப்ரிடி, பாகிஸ்தான் அணியின் தேர்வுக்குழுவில் இடம்பெற்ற ஒருவருக்கு கூட கிரிக்கெட் தெரியாது என்று காட்டமாக தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மேலும் பேசிய அவர், "நான் சில நாட்களுக்கு முன்பு லாகூரில் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய தலைவரை (மொஹ்சின் நக்வி) சந்தித்தேன். மைதானத்தை மேம்படுத்த அவர்செய்த முன்முயற்சிகள் அனைத்தும் நன்றாகவே இருந்தது, அவர் மேலும் கடாபி மைதானத்தை மெருகேற்ற விரும்புகிறார். ஆனால் அவர் என்னிடம் கிரிக்கெட்டை பற்றி ஒன்றுமே தெரியாது என்று கூறினார்.

உங்களுக்கு கிரிக்கெட்டை பற்றி ஒன்றுமே தெரியாது என்றால், கிரிக்கெட் பற்றி நன்கு தெரிந்த வல்லுநர்களுடன் சேர்ந்து பணியாற்ற வேண்டும். ஆனால் பாகிஸ்தான் தேர்வுக்குழுவில் தொடங்கி இயக்குநர்கள் வரை நாம் பார்க்கும் அத்தனை பேருக்கும் கிரிக்கெட் பற்றி ஒன்றுமே தெரியாது. அவர்கள் அங்கு என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்று புரியவில்லை, கிரிக்கெட்டை பற்றி ஒன்றுமே தெரியாதவர்களை வைத்துக்கொண்டு எப்படி உங்களால் கிரிக்கெட்டின் உள்கட்டமைப்பை சரிசெய்ய முடியும். பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் பாதுகாவலர்கள் சரியாக இருந்தால், அணியும் முன்னேற்றமடையும்" என்று ஷாஹித் அப்ரிடி தெரிவித்தார்.

முன்னதாக பாகிஸ்தான் அரசின் உள்துறை அமைச்சர் மொஹ்சின் நக்வி கடந்த ஆண்டு தொடக்கத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் (பி.சி.பி.) தலைவராகப் பொறுப்பேற்றார். 29 ஆண்டுகளுக்குப் பிறகு பாகிஸ்தானின் முதல் ஐசிசி போட்டியான 2025 ஐசிசி சாம்பியன்ஸ் டிராபியின் பொறுப்பாளராக அவர் இருந்தார். இருப்பினும், அவரது தலைமையின் கீழ், பாகிஸ்தான் கிரிக்கெட் வரலாற்றில் மிக மோசமான காலகட்டங்களில் ஒன்றைக் கண்டுள்ளது, 2024 டி20 உலகக் கோப்பை மற்றும் சாம்பியன்ஸ் டிராபியிலும் குழு நிலைகளிலிருந்து பாகிஸ்தான் அணி வெளியேறியது. இந்த சூழலில்தான் பாகிஸ்தான் முன்னாள் கேப்டன் ஷாஹித் அப்ரிடி , தற்போது நக்வி பற்றி ஒரு பெரிய கூற்றை முன்வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# இந்திய மல்யுத்த சம்மேளனம் மீதான நடவடிக்கை ரத்து

இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் (டபிள்யு.எப்.ஐ.,) தலைவராக பிரிஜ் பூஷன் சரண் சிங் இருந்தார். இவர் மீது பாலியல் புகார் கூறப்பட, கூட்டமைப்பில் இருந்து ஒதுங்கினார். இவருக்கு நெருக்கமான சஞ்சய் சிங், புதிய தலைவராக தேர்வு செய்யப்பட, சர்ச்சை தொடர்ந்தது. இதையடுத்து மத்திய விளையாட்டுத் துறை அமைச்சகம் டபிள்யு.எப்.ஐ.,க்கு தடை விதித்தது. மல்யுத்த கூட்டமைப்பை நிர்வகிக்க உயர் மட்ட கமிட்டியை, இந்திய ஒலிம்பிக் சங்கம் அமைத்தது. தற்காலிக குழுவிற்கு பூபிந்தர் சிங் பஜ்வா தலைமை தாங்கினார். ஹாக்கி ஒலிம்பிக் வீரர் எம்.எம்.சோமயா உள்ளிட்டோர் உறுப்பினராக இருந்தனர். இந்நிலையில், இந்திய மல்யுத்த சம்மேளனத்தின் மீதான இடைநீக்கத்தை விளையாட்டு அமைச்சகம் ரத்து செய்தது. கூட்டமைப்பின் தேசிய விளையாட்டு கூட்டமைப்பு என்ற அந்தஸ்தையும் மீட்டெடுத்தது. அனைத்து சர்வதேச போட்டிகளும் நியாயமாகவும், வெளிப்படையாகவும் நடப்பதை உறுதி செய்ய வேண்டும் என விளையாட்டு அமைச்சகம் அறிவுறுத்தி உள்ளது.

# துபாய்க்கு உலக லெவனை கூட்டி வந்தாலும் இந்தியா வெல்லும் பாக். முன்னாள் வீரர் பாராட்டு

9வது ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி தொடரில் நியூசிலாந்தை வீழ்த்தி இந்தியா சாம்பியன் பட்டம் வென்றது. இந்த தொடர் முதலில் பாகிஸ்தானில் மட்டுமே நடைபெறுவதாக இருந்தது. ஆனால் பாதுகாப்பு பிரச்சினை காரணங்களுக்காக இந்திய அணி பாகிஸ்தான் செல்ல மறுத்ததால் இந்திய அணிக்குரிய ஆட்டங்கள் அனைத்தும் துபாயில் நடைபெற்றது. இதில் விளையாடிய அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்ற இந்தியா தோல்வியே சந்திக்காமல் கோப்பையை கைப்பற்றியது. ஆனால் இந்திய அணி ஒரே மைதானத்தில் விளையாடி கோப்பையை வென்று விட்டதாக பல முன்னாள் மற்றும் இந்நாள் வீரர்கள் குற்றம் சாட்டி இருந்தனர். இந்நிலையில் துபாய்க்கு உலக லெவனை கூட்டி சென்றாலும் இந்திய அணி எளிதில் வீழ்த்தி விடும் என்று பாகிஸ்தான் முன்னாள் வீரர ஷாகீத் அப்ரிடி பாராட்டியுள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், " அவர்கள் வெற்றி பெறத் தகுதியானவர்கள். நீங்கள் உங்கள் நாட்டில் கிரிக்கெட்டில் நல்ல முதலீடு செய்யும்போது, அதற்கான பலன்களைப் பெறுவீர்கள். சாம்பியன்ஸ் டிராபிக்கான இந்திய அணியின் தேர்வு அற்புதமானது.

ஆம், அவர்கள் தங்கள் அனைத்து போட்டிகளையும் ஒரே இடத்தில் விளையாடியதாலும், இடங்களை மாற்றாததாலும், அவர்களுக்கு நிலைமைகள் தெரியும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அது அவர்களின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெரிய காரணம். ஆனால் உண்மையான காரணம் அவர்களின் தேர்வுதான். நான் துபாயில் விளையாடியதால் இது எனக்குத் தெரியும், சுழற்பந்து வீச்சாளர்களின் பங்கு இங்கே மிகவும் முக்கியமானது.

அவர்களின் தேர்வு மிகவும் நன்றாக இருந்தது. தொடக்க வீரர்கள் முதல் மிடில் ஆர்டர் வரை, ஆல்ரவுண்டர்கள், உண்மையான சுழற்பந்து வீச்சாளர்கள் மற்றும் வேகப்பந்து வீச்சாளர்கள் வரை இந்திய அணியைப் பார்த்தால் நீங்கள் உலக லெவனை உருவாக்கி, துபாயில் இந்தியாவுக்கு எதிராக விளையாட வைத்தால், இந்தியாதான் வெற்றி பெறும் என்று நான் கூறுவேன்" என கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.